## இஸ்லாமியக் கலாச்சாரத்தின் வாழ்வியல் அம்சங்கள்

செல்வம் வாழ்க்கையின் இன்றியமையாத அம்சங்களில் ஒன்றாகும். அல்லாஹ் தஆலா செல்வத்தை மனிதர்களுடைய வாழ்க்கை மற்றும் அது நிலைபெற்றிருப்பதற்கான ஒரு ஆதாரமாகவும் ஆக்கியுள்ளான். அல்லாஹ் தஆலா அதனை மனித வாழ்க்கையின் அலங்காரமான சாதனங்களில் ஒன்றாகவும் ஆக்கியுள்ளான். மனிதன் பொருள் சம்பாதித்து அதனைச் சேமித்து வைப்பதற்காக ஆயுள் முழுவதும் அதற்காகவே கஷ்டப்பட்டு உழைக்கின்றான், ஆனால், இதே பொருட்செல்வம் அவனுக்கு சோதனைக்கான ஒரு பொருளாகவும் அமைகின்றது. அல்லாஹ் தஆலா கூறுகின்றான்.

زُيِّنَ لِلنَّاسِ حُبُّ ٱلشَّهَوَٰتِ مِنَ ٱلنِّسَآءِ وَٱلۡبَنِينَ وَٱلۡقَنَٰطِيرِ ٱلۡمُقَنطَرَةِ مِنَ ٱلذَّهَبِ وَٱلۡفِضَّةِ وَٱلۡخَيۡلِ
ٱلۡمُسَوَّمَةِ وَٱلۡأَنۡعَٰمِ وَٱلۡحَرۡثِۗ ذَٰلِكَ مَتَٰعُ ٱلۡحَيَوٰةِ ٱلدُّنۡيَاۖ وَٱللَّهُ عِندَهُۥ حُسۡنُ ٱلۡمَـَٔابِ ١٤

பொருள்: பெண்கள், பிள்ளைகள், தங்கம் மற்றும் வெள்ளியினாலான பெருங்குவியல்கள், உயர் ரகக் குதிரைகள், கால்நடைகள் மற்றும் வேளாண்மை நிலங்கள் ஆகியவற்றின்மீது மோகம் கொள்வது மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது. ஆனால், இவை அனைத்தும் இவ்வுலகின் சில நாள் வாழ்க்கைக்குரிய சாதனங்களே ஆகும். திண்ணமாக, அழகிய உறைவிடம் அல்லாஹ்விடம் தான் இருக்கின்றது (ஆலு இம்ரான்:14).

பொருளைச் சேமித்துக் குவிக்கவேண்டும் என்ற பைத்தியம் சில சமயங்களில் மனிதனை ஹலாலான ஆதாரங்களை விட்டுவிலகி ஹராமான வழிமுறைகளைக் கடைபிடிப்பதற்கு நிர்ப்பந்தப்படுத்துகின்றது. இதன் காரணமாக, மனிதன் செல்வத்தையே வழிபடுபவனாகவும் அதற்கு அடிமையாகவும் ஆகிவிடுகின்றான். சில சமயங்கில் மனிதன் தன்னுடைய இச்சைகளுக்கு அடிமையாகி கட்டுப்பாடு இழந்த நிலையில் தன்னுடைய செல்வத்தையெல்லாம் தன்மைனயும் தன்னுடைய சமுதாயத்தையுமே அழித்துவிடக்கூடிய வழிகளிலெல்லாம் செலவழித்தும்விடுகின்றான். இதன் காரணமாகவே, இஸ்லாம் பொருளை சம்பாதிக்கும் மற்றும் அதனைச் செலவு செய்யும் வழிமுறைகளை வகுத்துத் தந்துள்ளது. இஸ்லாம் மனிதனைத் தன்னுடைய பொருள் சம்பாதித்த மற்றும் அதனைச் செலவழித்தவற்றிற்கெல்லாம் பதில்கூறக் கடமைப்பட்டுள்ளான் என்று அறிவுறுத்தியுள்ளது. மேலும், இஸ்லாம் மறுமையை ஒப்பிடும்போது மனிதன் செல்வத்தை விரும்புவது மற்றும் அதனால் ஏற்படும்

*கேடுகளைப்பற்றியும் அச்சுறுத்தியுள்ளது. இவ்வியஷயம் ஒரு நபிமொழியில் மிகவும் விரிவாகவே எடுத்துக்கூறப்பட்டுள்ளது:*

**لاَ تَزُوْلُ قَدَمَا عَبْدٍ يومَ الْقِيَامَةِ حَتَّى يُسْأَلَ عَنْ عُمُرِهِ فِيْمَا أَفْنَاهُ، وَعنْ عِلْمِهِ فِيْمَ فَعَلَ، وَعنْ مَالِهِ مِنْ أَيْنَ اكْتَسَبَهُ وَفِيْمَ أَنْفَقَهُ، وَعَنْ جِسْمِهِ فِيْمَ أَبْلاَهُ** (الترمذي)

*பொருள்: எந்த ஒரு மனிதனுடைய பாதங்களும் அல்லாஹ்வுக்கு முன்பு நிறுத்தப்படும் மறுமை நாளன்று சற்றும் நகர முடியாது, எதுவரை அவனிடம் அவனுடைய ஆயுளை எவ்வாறு செலவழித்தான் என்றும், அவன் தன்னுடைய கல்வியின் அடிப்படையில் எவ்வாறு செயல்பட்டான் என்றும் அவனுடைய பொருளை எங்கிருந்து சம்பாதித்தான் மற்றும் எதில் செலவு செய்தான் என்றும், அவன் தன்னுடைய உடல் ஆரோக்கியத்தை எவ்வகையில் ஈடுபடுத்தினான் என்றும் கேட்கப்பட்டுவிடாதவரையில் (திர்மிதி)*

*மேலும், அல்லாஹ் தஆலா கூறுகின்றான்.*

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ لَا تُلۡهِكُمۡ أَمۡوَٰلُكُمۡ وَلَآ أَوۡلَٰدُكُمۡ عَن ذِكۡرِ ٱللَّهِۚ وَمَن يَفۡعَلۡ ذَٰلِكَ فَأُوْلَٰٓئِكَ هُمُ ٱلۡخَٰسِرُونَ ٩

*பொருள்: இறைநம்பிக்கை கொண்டவர்களே, உங்கள் செல்வங்களும் உங்கள் பிள்ளைகளும் அல்லாஹ்வை நினைவு கூர்வதைவிட்டு உங்களை அலட்சியத்தில் ஆழ்த்திவிடவேண்டாம். எவர்கள் அவ்வாறு செய்கிறார்களோ அவர்கள்தாம் நஷ்டமடைந்தவர்கள் (அல் முனாஃபிகூன்:9)*

*மேலும், அல்லாஹ் தஆலா மற்றுமொரு இடத்தில் கூறுகின்றான்.*

إِنَّمَآ أَمۡوَٰلُكُمۡ وَأَوۡلَٰدُكُمۡ فِتۡنَةٞۚ وَٱللَّهُ عِندَهُۥٓ أَجۡرٌ عَظِيمٞ ١٥

*பொருள்: உங்களுடைய செல்வங்களும் உங்களுடைய பிள்ளைகளும் ஒரு சோதனையே, மேலும் அல்லாஹ்விடம்தான் மகத்தான கூலி உள்ளது (அத் தங்காபுன்:15)*

*செல்வத்தைப்பற்றி முஸ்லிம்கள் சில விஷயங்களை அறிந்திருப்பது இன்றியமையாததாகும்.*

1. இவ்வுலகத்தில் கிடைக்கப்பெறும் மற்ற பொருட்களைப்போன்றே செல்வமும் அல்லாஹ்வுக்கே உரியதாகும்
2. பொருள் அல்லாஹ்வுக்கே உரியதாகும் என்ற வகையில், அவனே அதன் அதிபதியாவான் மற்றும் மனிதன் காப்பாளனாக மட்டுமே உள்ளான். அவன் அதனை சிறந்த முறையில் பயன்படுத்துவானேயானால் அவனுக்கு சிறந்த கூலி உண்டு, மாறாக, அதனை தவறான வழிகளில் செலவு செய்தானேயானால் அவனிடம் அல்லாஹ் அதற்கான கணக்கு கேட்பான்.
3. செல்வம் என்பது மனிதன் ஒரு கண்ணியமிக்க வாழ்கையினை மேற்கொள்வதற்கான சாதனமேயன்றி, ஒரு மனிதன் அதனைச் சம்பாதிப்பதற்காக என்றென்றும் கடின உழைப்பினை மேற்கொண்டு அவனுடைய ஆயுள் முழவதும் அதிலேயே செலவழிக்கவேண்டிய அவனுடைய வாழ்க்கைக்கான குறிக்கோள் அல்ல. உண்மையான முஸ்லிம் செல்வத்தின் முக்கியத்ததுவத்தை அலட்சியப்படுத்துவதில்லை, ஆகவேதான், அவன் ஹலாலான முறையில் மட்டுமே அதனை சம்பாதிக்கிறான் மற்றும் அல்லாஹ்விற்குப் பிடித்தமான வழிகளில் மட்டுமே அதனை செலவும் செய்கிறான்
4. மனிதன் ஹலாலான முறையில் சம்பாதித்த செல்வம் அவனுடைய சொத்தாகும், அதனை பாதுகாக்கவேண்டியது அவன்மீது கடமையுமாகும், இதனை வேறு எவருக்கும் அபகரிக்கவோ கொள்ளையடிக்கவோ உரிமையில்லை.

மேற்கூறப்பட்ட அடிப்படைகள் மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் மனிதனுக்கு அதனைச் செலவு செய்வதற்கான முழு அதிகாரமும் உள்ளது, அது பொருளை சம்பாதிப்பதற்காக இருந்தாலும் சரி, அதனைச் செலவழிப்பதற்காக இருந்தாலும் சரி, அல்லது அதனை நிர்வகிப்பதிலும். மனிதன் ஹலாலான முறையில் சம்பாபாதித்த செல்வத்தின்மீது அவன் நிறைவேற்ற வேண்டடிய சில கடமைகள் உள்ளன.

* * *